**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC 133/2018 .** | | |
| **PW/DW/CW** | : | **PW3** | | |
| **Name** | : துரை | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |

(Accused present)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.12.2023

---

**முதல் விசாரணை:**

நான் பெரியசெம்மேட்டுபட்டியில் குடியிருந்து வருகிறேன், எனக்கு சாட்சி பிரவீன் எனது மகன், எனக்கு அரசு தரப்பு சாட்சிகளை தெரியும், விபத்தில் இறந்து போன நபர் மகேந்திரன் எனக்கு பழக்கம் ஆனவர்,20.08.2016 ம் தேதி சுமார் இரவு 7.00 மணியளவில் நான் சம்பவ இடமான SOR ோஹாண்டா ஷோ ரூம் அருகே நானும் ராமர், பிரவீன் ஆகியோர்கள் பேசி கொண்டிருந்த போது உசிலம்பட்டியிலிருந்து கிழக்கு நோக்கி மகேந்திரன் ஸ்கூட்டியில் சென்று கொண்டிருந்தார். மதுரையிலிருந்து கம்பம் செல்லும் அரசு பேருந்து அதிவேகமாக வந்து முன்னால் சென்ற லாரியை ஓவர் டேக் செய்யும் போது எதிரே மகேந்திரன் வந்த வாகனத்தின் மீது மோதியதில் மகேந்திரன் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார், அவருக்கு தலை மற்றும் வாயில் அடிபட்டிருந்தது. நான் உடனே காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னேன். பின்பு இறந்தவரின் வீட்டிற்கு அவரது மகளுக்கு தகவல் சொன்னோம். விபத்து ஏற்படுத்திய பேருந்து அங்கேயே நின்றது, ஒட்டுநர் இறங்கி சென்று விட்டார், ஆஜர் எதிரி தான் அன்றைய தினம் பேருந்தை ஓட்டி வந்தவர். 108 ஆம்புலன்ஸ்சில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு மகேந்திரனை கொண்டு சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் விவசாயம் செய்கிறேன், SOR ோஹாண்டா ஷோ ரூம் என்பது உசிலம்பட்டிற்கு கிழக்கே மதுரை தேனி ரோட்டிற்கு வடக்கு புறம் உள்ளது. நானும் மற்ற சாட்சிகளும் அங்கு நின்று பேசிக்கொண்டிருந்தோம். டம் என்ற சத்தம் கேட்டு

நாங்கள் அங்குபோய் பார்த்தோம் என்றால் சரிதான். அங்கு போய் பார்த்தபின்பு தான் இன்னார் என்று தெரியவந்தது. சம்பவம் நடைபெற்ற சமயம் சுமார் இரவு 6.50 யிலிருந்து 7.00 மணிக்குள் இருக்கும். அங்கிருந்த கீழப்புதுார் நபர்களிடம் தகவல் சொல்லிவிட்டோம். நாங்கள் தகவல் சொன்ன நபர் தான் அவர் வீட்டிற்கு தகவல் சொன்னார். விபத்து சமயத்தில் அவருக்கு பேருந்து வருவதை கவனிக்காமல் சாலையை திடீரென குறுக்கே கடந்ததால் தான் தவிர்க்க இயலாதபடி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. பேருந்து தான் ஓவர்டேக் செய்து இறந்த நபர் மீது மோதியது. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும் உண்மைக்கு புறம்பாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S.d./Durai
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.